**புத்தசாசன நிதியம் - 2018**

**-----------------------------------**

# 1. நிதிக் கூற்றுக்கள்

**-----------------------**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**-----------------------------------------**

புத்தசாசன நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்குகள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**-------------------------------------------------------------------**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

**------------------------------------------------------------------------------------------------------**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது**,** நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள

---------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) பணம் செலுத்தல் | 1,717,000 | பணம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக் கான ரசீது | குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகைக்கு தொடர்புடையதாக பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கொடுப்பனவு தொடர்பாக, குறித்த தொகை பெற்றுக் கொண்டமைக்கு ரசீது சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) பொறுப்பு | 1,348,796 | விரிவான தகவல்கள் | 2015 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் முன்கொண்டு வந்த தொகையாவதுடன் இதுவரையிலும் மாற்றம் ஏற்படவில்லை. | விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேுண்டுமென. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------

### 1.6.1 பெறவேண்டியவைகள்

----------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 13,031,828 ஆன முற்பணம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் தொடர்பாக ஆண்டு பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத போதிலும், கடந்த ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,087,447 ஆன தொகை 06 ஆண்டுகள் மற்றும் எஞ்சிய ரூபா 11,944,381 ஆண தொகை 3 ஆண்டுகளினை பார்க்கிலும் பழைமையான மீதியாக இனங்காணப்பட்டதுடன், அம் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டிராததுடன் இது தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்காக கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. | குறித்த மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டுமென. |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

---------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 1,712,435 பெறுமதியான இரண்டு நடைமுறை பொறுப்பு மீதிகள் தொடர்பாக ஆண்டு பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிராத போதிலும், கடந்த ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 544,409 ஆன தொகை 04 ஆண்டுகளுக்கு மற்றும் எஞ்சிய ரூபா 1,168,025 ஆன தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான மீதியானதுடன் அம் மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டிராததுடன் இது தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதற்காக கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. | குறித்த மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டுமென. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

----------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிதியத்தினால் வழங்கப்பட்ட | காசோலை தொடர்பாக தொடர்புடைய தரப்பினருக்கு தெரியப்படுத்துவதற்காக கடிதங்கள் | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் முன்வைக்கப்படாத ரூபா 59,863 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு இந்த அறிக்கை திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளதுடன் வேறு எந்த தீர்மானமும் எடுத்திருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டுமென. |
| (ii) நிதிப்பிரமாணம் 502(2) | கூட்டுத்தொகை ரூ 10,213,031 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்து பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிராததுடன் 2020 ஆம் ஆண்டில் பேணிச் செல்லப்படுகின்றது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |
| (iii) நிதிப்பிரமாணம் 757 (2) | பெறுமதி ரூபா 8,652,506 ஆன பௌத்த தர்ம கிரந்தம் தொடர்பான ஆய்வொன்று மேற்கொண்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளில் முன்கொண்டு வந்த தொகையாவதுடன் இதுவரையிலும் மாற்றம் ஏற்படவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் ஊடாக உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2) (ஈ) பிரமாணம். | கணக்கு ஆண்டு முடிவடைந்து 02 மாதங்களினுள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள், இரண்டு ஆண்டுகளும் 08 மாதங்களும் கால தாமதத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | 2016,2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் கணக்குகள், 2020 ஆம் ஆண்டில் தயாரித்ததன் காரணத்தினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கால தாமதம் இன்றி கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### நிதி விளைவுகள்

-------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 41,593,654 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முந்தைய ஆண்டின் மிகை ரூபா 41,905,243 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 311,589 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 3,227,068 இனால் அதிகரித்தமையும் சுகாதார நடவடிக்கைகளுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3,000,000 ஆன தொகை செலவு செய்தமை மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 619,589 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

### செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றின் பிரகாரம், மீளாய்வாணடில் ரூபா 55,366,914 ஆன தொகை நிதியத்தின் வருமானமாக பெறப்பட்டிருப்பினும் அதில் ரூபா 13,773,260 அதாவது 25 சதவீதம் நிதியத்தின் நோக்கத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், வருடாந்தம் மிகையாகின்ற பணத்தொகை முதலிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா 531,760,164 ஆக காணப்பட்டது. புத்தசாசனத்தை பாதுகாத்தல் மற்றும் போசித்தல் போன்வற்றை மிகவும் அருகதையுடைய பணிக்காக நிதியை ஈடுப்படுத்தல் நிதியத்தின் பணிப்பொறுப்பாக காணப்பட்ட போதிலும், வருடாந்தம் நிதியத்திற்கு கிடைக்கின்ற வருமானத்திற்கு நிகரான வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது. | 2018 ஆம் ஆண்டின் வட்டி சதவீதம் மீது பெறப்பட்ட வட்டி வருமானம் அதிகமாக காணப்பட்ட போதிலும் 2018 ஆம் ஆண்டின் நிதியத்தின் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கீழ் மட்டத்தில் காணப்பட்டது. எனினும் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிதியத்தின் செயற்திட்டங்களில் வளர்ச்சியொன்று காணப்பட்டது. | நிதியத்தின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதற்கு தெடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். |